குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.87/2020

அ.சா.04

2026–ம் ஆண்டு மார்ச் 16–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவிச்சந்திரன் | தொழில் | |
| தந்தை பெயர் | அருணாச்சலம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.05 மணி,

Accused Marimuthu present. Advocate Mr.K.T.Chelladurai present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 07.10.2019 ஆம் தேதி நான் ஓமலூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது காலை 06.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது சாட்சி பழனிசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.395/2019 சட்டப்பிரிவுகள் 279, 304(ஏ) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த புகார் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

2. பின்பு முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. இவ்வழக்கு சம்பவம் 06.10.2019 ஆம் தேதி இரவு 09.40 மணிக்கு நடந்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. இவ்வழக்கு புகார் 07.10.2019 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரி. அன்றைய தினம் நான்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.16 17:11:04 +0530

06.10.2019 ஆம் தேதி இரவு 10.00 மணி முதல் 07.10.2019 ஆம் தேதி காலை 07.00 மணி வரை பணியிலிருந்தேன் என்றால் சரி. நான், சம்பவம் நடந்த அன்று இரவு சம்பவ இடத்திற்கு சென்று விபத்தில் இறந்த சூர்யா என்ற உதய சூரியன் என்பவரின் உடலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

4. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் லாரியில் சேதங்கள் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அந்த நேரத்தில் காயமடைந்த நபரை நான் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு, விபத்தில் ஈடுபட்ட வாகனங்களை காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தேன். அதில் உள்ள சேதங்களை நான் கவனிக்கவில்லை. அதன்பின்னிட்டு நான் மேற்படி வாகனத்தில் ஏற்பட்டிருந்த சேதங்கள் குறித்து நான் கவனிக்கவில்லை.

5. பொதுவாக இருசக்கர வாகனத்தில் பயணிப்பவர்கள் ரோட்டின் இடது ஓரமாக செல்லவேண்டும் என்றால் சரி. அ.சா.ஆ.2 புகாரில், விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் லாரியின் வலதுபக்க முன்சக்கரம் விபத்தில் இறந்த நபரின் மீது ஏறியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. நான், பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் 15.10.2019 ஆம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றைய தினமே அனுப்பி வைத்தேன்.

6. விபத்திற்கு காரணம் எதிரியின் அஜாக்கிரதை இல்லை என்றாலும், விபத்தில் இறந்த நபருக்கு நஷ்டஈடு பெறவேண்டி புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், எதிரியின் வாகனம் விபத்தில் இறந்த நபர் மீது மோதவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.18 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.16 17:11:07 +0530